திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்றீசல்களைப் போல பெருகி வரும் இந்த நர்சரிப் பள்ளிகளிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் போதிய பயிற்சி இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அந்தக் குழந்தைகளுக்கு சரியான முறையிலே சொல்லிக் கொடுக்க ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகளுக்கு நல்ல முறையிலே சொல்லிக் கொடுக்கின்ற வகையிலே அந்த ஆசிரியர்களுக்கென்று குறுகிய கால பயிற்சியை அளிப்பதற்கு சட்டம் இயற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழலையர் பள்ளிகளை ஒழுங்காற்றும் வகையிலேதான் சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய அறிக்கை பெறப்பட்டு இருக்கிறது. Code of regulations for approved Nursery and Primary Schools என்று அரசு இப்போது முறை வைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்திருக்கிறோம். ஆசிரியர்களுக்கானகோட் ஆப் காண்டக்ட், உள்பட அனைத்தையும் அரசு நிர்ணயித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் ஒப்புதல் பெறப்பட்ட பள்ளிகளிலே பணியாற்ற வேண்டும் என்று அரசு வற்புறுத்தி, அதைச் செயலாக்கி வருகிறது. ஒப்புதல் பெறாத பள்ளிகளில் அப்படி இருந்தால், ஒப்புதல் பெறும்போது அதை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கும். அவர்களுக்காக தனியாக பயிற்சி தரும் திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 35, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

35—

அந்தியூர் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*39755—திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில், அந்தியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பவானி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

1996 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில் அந்தியூர் பேரூராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது மேலும், சின்னதம்பிபாளையம், மைக்கேல்பாளையம் மற்றும் நகலூர் கிராமங்களுக்கு ஒரு குடிநீர் திட்டம் ஆய்வில் உள்ளது. அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 104 கிராமங்களையும், அம்மாப்பேட்டை ஒன்றியத்திலுள்ள 95 கிராமங்களையும் இணைத்து ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, அந்தியூர் ஒன்றியத்திலே, அந்தியூர் பேரூராட்சியிலே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது, அதேபோல அம்மாபேட்டையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் நல்ல முறையிலே இருந்தாலும் கூட, அந்தியூரிலே கீழ்வாணி. மூங்கில்பட்டி, வேம்பட்டி, பிரம்மதேசம், பச்சாம்பாளையம், சங்கராபாளையம், எண்ணமங்கலம், கட்டிசமுத்திரம் போன்ற பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எல்லா ஊர்களிலும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பின்னாலே தாங்கள் சிறப்பான முறையிலே ஆழ்குழாய்களைப் போட்டிருந்தாலும்கூட, வறட்சி காரணமாக அந்தப் பகுதியிலே எவ்வளவுதான் போட்டாலும், விவசாயிகள் அதிகமாக ஆழ்குழாய்களைப் போட்டு தண்ணீர் எடுத்துவிடுகிற காரணத்தாலே அந்த ஆழ்க்குழாய்களிலே தண்ணீர் பொய்த்து விடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று இந்தத் திட்டத்தை எப்போது நீங்கள் செயல்படுத்துவீர்கள் ? சின்னதம்பிபாளையம், மைக்கேல்பாளையம், நகலூர் போன்ற திட்டம் ஆய்வில் இருப்பதாகவே சொன்னீர்கள். நீண்ட நாட்களாகிவிட்டது. ஆகவே, விரைந்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ? பவானி ஆற்றிலோ அல்லது காவிரி ஆற்றிலிருந்தோ தண்ணீர் விரைவாகக் கொண்டு வருவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்பதனை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சுமார் 104 கிராமங்களையும், அம்மாபேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட 95 கிராமங்களையும் இணைத்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 21 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு இன்றைக்கு ஆய்விலே இருந்து வருகிறது. ஆய்வு செய்யப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கைக்காக அரசுக்கு அந்தத் திட்டம் அனுப்பப்பட்டு இருக்கிறது. நிதி நிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 36, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

36—

திருத்தணிக்கு குடிநீர்த் திட்டம்

*78852—திரு. கி. இராஜன் பாபு (என்கிற) தணிகை பாபு :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி நகரில் 20 ஆண்டுகளுக்கு மேலாக கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருவதைப் போக்கும் வகையில் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் இந்த ஆண்டிலேயே நிறைவேற்றப்பட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ : திருத்தணி நகருக்கு தற்போதுள்ள குடிநீர்த் திட்டம் 1967 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. எனவே தற்போதுள்ள குடிநீர்த் தேவையினை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 410 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.